# வேல் மாறல்

திருத்தணியில் உதித்து அருளும் ஒருத்தன்மலை
விருத்தன் எனது உளத்தில் உறை
கருத்தன் மயில் நடத்துகுகன் வேலே (12)

பருத்தமுலை சிறுத்தஇடை வெளுத்தநகை
கறுத்தகுழல் சிவத்தஇதழ் மறச்சிறுமி
விழிக்குநிகர் ஆகும் (திரு) 1

திருத்தணியில் உதித்து அருளும் ஒருத்தன்மலை
விருத்தன் எனது உளத்தில் உறை
கருத்தன் மயில் நடத்துகுகன் வேலே (திரு) 2

சொலற்கு அரிய திருப்புகழை உரைத்தவரை
அடுத்தபகை அறுத்து எறிய
உறுக்கி எழும் அறத்தை நிலை காணும் (திரு) 3

தருக்கிநமன் முருக்கவரின் எருக்குமதி
தரித்தமுடி படைத்த விறல் படைத்த இறை
கழற்குநிகர் ஆகும் (திரு) 4

பனைக்கைமுக படக்கரட மதத்தவள
கஜக்கடவுள் பதத்து இடும் நி
களத்துமுளை தெறிக்கவரம் ஆகும் (திரு) 5

சினத்து அவுணர் எதிர்த்தரண களத்தில்வெகு
குறைத்தலைகள் சிரித்து எயிறு
கடித்துவிழி விழித்து அலற மோதும் (திரு) 6

துதிக்கும்அடி யவர்க்கு ஒருவர் கெடுக்க இடர்
நினைக்கின் அவர் குலத்தைமுதல் அறக்களையும்
எனக்கு ஓர் துணை ஆகும் (திரு) 7

தலத்தில் உள கணத்தொகுதி களிப்பின் உண
வழைப்பது என மலர்க்கமல கரத்தின்முனை
விதிர்க்கவளைவு ஆகும் (திரு) 8

பழுத்தமுது தமிழ்ப்பலகை இருக்கும் ஒரு
கவிப்புலவன் இசைக்கு உருகி
வரைக்குகையை இடித்துவழி காணும் (திரு) 9

திசைக்கிரியை முதற்குலிசன் அறுத்தசிறை
முளைத்தது என முகட்டின்இடை
பறக்கஅற விசைத்து அதிர ஓடும் (திரு) 10

சுடர்ப்பரிதி ஒளிப்பநிலவு ஒழுக்கும்மதி
ஒளிப்பஅலை அடக்குதழல் ஒளிப்பஒளிர்
ஒளிப்பிரபை வீசும் (திரு) 11

*தனித்துவழி நடக்கும்எனது இடத்தும்ஒரு*
*வலத்தும்இரு புறத்தும்அருகு*
*அடுத்துஇரவு பகற்றுணையது ஆகும் (திரு)* 12

*பசித்துஅலகை முசித்துஅழுது முறைப்படுதல்*
*ஒழித்துஅவுணர் உரத்துஉதிர*
*நிணத்தசைகள் புசிக்கஅருள் நேரும் (திரு)* 13

*திரைக்கடலை உடைத்துநிறை புனற்கடிது*
*குடித்துஉடையும் உடைப்பு அடைய*
*அடைத்து உதிரம் நிறைத்துவிளை யாடும் (திரு)* 14

*சுரர்க்கும்முநி வரர்க்கும்மக பதிக்கும்விதி*
*தனக்கும்அரி தனக்கும்நரர் தமக்கும்உறும்*
*இடுக்கண்வினை சாடும் (திரு)* 15

*சலத்துவரும் அரக்கர்உடல் கொழுத்துவளர்*
*பெருத்தகுடர் சிவத்ததொடை*
*எனச்சிகையில் விருப்பமொடு சூடும் (திரு)* 16

*சுரர்க்கும்முநி வரர்க்கும்மக பதிக்கும்விதி*
*தனக்கும்அரி தனக்கும்நரர் தமக்கும்உறும்*
*இடுக்கண்வினை சாடும் (திரு)* 17

*சலத்துவரும் அரக்கர்உடல் கொழுத்துவளர்*
*பெருத்தகுடர் சிவத்ததொடை*
*எனச்சிகையில் விருப்பமொடு சூடும் (திரு)* 18

*பசித்துஅலகை முசித்துஅழுது முறைப்படுதல்*
*ஒழித்துஅவுணர் உரத்துஉதிர*
*நிணத்தசைகள் புசிக்கஅருள் நேரும் (திரு)* 19

*திரைக்கடலை உடைத்துநிறை புனற்கடிது*
*குடித்துஉடையும் உடைப்பு அடைய*
*அடைத்து உதிரம் நிறைத்துவிளை யாடும் (திரு)* 20

*சுடர்ப்பரிதி ஒளிப்பநிலவு ஒழுக்கும்மதி*
*ஒளிப்பஅலை அடக்குதழல் ஒளிப்பஒளிர்*
*ஒளிப்பிரபை வீசும் (திரு)* 21

*தனித்துவழி நடக்கும்எனது இடத்தும்ஒரு*
*வலத்தும்இரு புறத்தும்அருகு*
*அடுத்துஇரவு பகற்றுணையது ஆகும் (திரு)* 22

*பழுத்தமுது தமிழ்ப்பலகை இருக்கும் ஒரு*
*கவிப்புலவன் இசைக்கு உருகி*
*வரைக்குகையை இடித்துவழி காணும் (திரு)* 23

*திசைக்கிரியை முதற்குலிசன் அறுத்தசிறை*
*முளைத்தது என முகட்டின்இடை*
*பறக்கஅற விசைத்து அதிர ஓடும் (திரு)* 24

*துதிக்கும்அடி யவர்க்கு ஒருவர் கெடுக்க இடர்*
*நினைக்கின் அவர் குலத்தைமுதல் அறக்களையும்*
*எனக்கு ஓர் துணை ஆகும் (திரு) 25*

*தலத்தில் உள கணத்தொகுதி களிப்பின் உண*
*வழைப்பது என மலர்க்கமல கரத்தின்முனை*
*விதிர்க்கவளைவு ஆகும் (திரு) 26*

*பனைக்கைமுக படக்கரட மதத்தவள*
*கஜக்கடவுள் பதத்து இடும் நி*
*களத்துமுளை தெறிக்கவரம் ஆகும் (திரு) 27*

*சினத்து அவுணர் எதிர்த்தரண களத்தில்வெகு*
*குறைத்தலைகள் சிரித்து எயிறு*
*கடித்துவிழி விழித்து அலற மோதும் (திரு) 28*

*சொலற்கு அரிய திருப்புகழை உரைத்தவரை*
*அடுத்தபகை அறுத்து எறிய*
*உறுக்கி எழும் அறத்தை நிலை காணும் (திரு) 29*

*தருக்கிநமன் முருக்கவரின் எருக்குமதி*
*தரித்தமுடி படைத்த விறல் படைத்த இறை*
*கழற்குநிகர் ஆகும் (திரு) 30*

*பருத்தமுலை சிறுத்தஇடை வெளுத்தநகை*
*கறுத்தகுழல் சிவத்தஇதழ் மறச்சிறுமி*
*விழிக்குநிகர் ஆகும் (திரு) 31*

*திருத்தணியில் உதித்து அருளும் ஒருத்தன்மலை*
*விருத்தன் எனது உளத்தில் உறை*
*கருத்தன் மயில் நடத்துகுகன் வேலே (திரு) 32*

*தருக்கிநமன் முருக்கவரின் எருக்குமதி*
*தரித்தமுடி படைத்த விறல் படைத்த இறை*
*கழற்குநிகர் ஆகும் (திரு) 33*

*சொலற்கு அரிய திருப்புகழை உரைத்தவரை*
*அடுத்தபகை அறுத்து எறிய*
*உறுக்கி எழும் அறத்தை நிலை காணும் (திரு) 34*

*திருத்தணியில் உதித்து அருளும் ஒருத்தன்மலை*
*விருத்தன் எனது உளத்தில் உறை*
*கருத்தன் மயில் நடத்துகுகன் வேலே (திரு) 35*

*பருத்தமுலை சிறுத்தஇடை வெளுத்தநகை*
*கறுத்தகுழல் சிவத்தஇதழ் மறச்சிறுமி*
*விழிக்குநிகர் ஆகும் (திரு) 36*

*தலத்தில் உள கணத்தொகுதி களிப்பின் உண*
*வழைப்பது என மலர்க்கமல கரத்தின்முனை*
*விதிர்க்கவளைவு ஆகும் (திரு) 37*

*துதிக்கும்அடி யவர்க்கு ஒருவர் கெடுக்க இடர்*
*நினைக்கின் அவர் குலத்தைமுதல் அறக்களையும்*
*எனக்கு ஓர் துணை ஆகும் (திரு) 38*

*சினத்து அவுணர் எதிர்த்தரண களத்தில்வெகு*
*குறைத்தலைகள் சிரித்து எயிறு*
*கடித்துவிழி விழித்து அலற மோதும் (திரு) 39*

*பனைக்கைமுக படக்கரட மதத்தவள*
*கஜக்கடவுள் பதத்து இடும் நி*
*களத்துமுளை தெறிக்கவரம் ஆகும் (திரு) 40*

*தனித்துவழி நடக்கும்எனது இடத்தும்ஒரு*
*வலத்தும்இரு புறத்தும்அருகு*
*அடுத்துஇரவு பகற்றுணையது ஆகும் (திரு) 41*

*சுடர்ப்பரிதி ஒளிப்பநிலவு ஒழுக்கும்மதி*
*ஒளிப்பஅலை அடக்குதழல் ஒளிப்பஒளிர்*
*ஒளிப்பிரபை வீசும் (திரு) 42*

*திசைக்கிரியை முதற்குலிசன் அறுத்தசிறை*
*முளைத்தது என முகட்டின்இடை*
*பறக்கஅற விசைத்து அதிர ஓடும் (திரு) 43*

*பழுத்தமுது தமிழ்ப்பலகை இருக்கும் ஒரு*
*கவிப்புலவன் இசைக்கு உருகி*
*வரைக்குகையை இடித்துவழி காணும் (திரு) 44*

*சலத்துவரும் அரக்கர்உடல் கொழுத்துவளர்*
*பெருத்தகுடர் சிவத்ததொடை*
*எனச்சிகையில் விருப்பமொடு சூடும் (திரு) 45*

*சுரர்க்கும்முநி வரர்க்கும்மக பதிக்கும்விதி*
*தனக்கும்அரி தனக்கும்நரர் தமக்கும்உறும்*
*இடுக்கண்வினை சாடும் (திரு) 46*

*திரைக்கடலை உடைத்துநிறை புனற்கடிது*
*குடித்துஉடையும் உடைப்பு அடைய*
*அடைத்து உதிரம் நிறைத்துவிளை யாடும் (திரு) 47*

*பசித்துஅலகை முசித்துஅழுது முறைப்படுதல்*
*ஒழித்துஅவுணர் உரத்துஉதிர*
*நிணத்தசைகள் புசிக்கஅருள் நேரும் (திரு) 48*

*திரைக்கடலை உடைத்துநிறை புனற்கடிது*
*குடித்துஉடையும் உடைப்பு அடைய*
*அடைத்து உதிரம் நிறைத்துவிளை யாடும் (திரு) 49*

*பசித்துஅலகை முசித்துஅழுது முறைப்படுதல்*
*ஒழித்துஅவுணர் உரத்துஉதிர*
*நிணத்தசைகள் புசிக்கஅருள் நேரும் (திரு) 50*

*சலத்துவரும் அரக்கர்உடல் கொழுத்துவளர்*
*பெருத்தகுடர் சிவத்ததொடை*
*எனச்சிகையில் விருப்பமொடு சூடும் (திரு)* *51*

*சுரர்க்கும்முநி வரர்க்கும்மக பதிக்கும்விதி*
*தனக்கும்அரி தனக்கும்நரர் தமக்கும்உறும்*
*இடுக்கண்வினை சாடும் (திரு)* *52*

*திசைக்கிரியை முதற்குலிசன் அறுத்தசிறை*
*முளைத்தது என முகட்டின்இடை*
*பறக்கஅற விசைத்து அதிர ஓடும் (திரு)* *53*

*பழுத்தமுது தமிழ்ப்பலகை இருக்கும் ஒரு*
*கவிப்புலவன் இசைக்கு உருகி*
*வரைக்குகையை இடித்துவழி காணும் (திரு)* *54*

*தனித்துவழி நடக்கும்எனது இடத்தும்ஒரு*
*வலத்தும்இரு புறத்தும்அருகு*
*அடுத்துஇரவு பகற்றுணையது ஆகும் (திரு)* *55*

*சுடர்ப்பரிதி ஒளிப்பநிலவு ஒழுக்கும்மதி*
*ஒளிப்பஅலை அடக்குதழல் ஒளிப்பஒளிர்*
*ஒளிப்பிரபை வீசும் (திரு)* *56*

*சினத்து அவுணர் எதிர்த்தரண களத்தில்வெகு*
*குறைத்தலைகள் சிரித்து எயிறு*
*கடித்துவிழி விழித்து அலற மோதும் (திரு)* *57*

*பனைக்கைமுக படக்கரட மதத்தவள*
*கஜக்கடவுள் பதத்து இடும் நி*
*களத்துமுளை தெறிக்கவரம் ஆகும் (திரு)* *58*

*தலத்தில் உள கணத்தொகுதி களிப்பின் உண*
*வழைப்பது என மலர்க்கமல கரத்தின்முனை*
*விதிர்க்கவளைவு ஆகும் (திரு)* *59*

*துதிக்கும்அடி யவர்க்கு ஒருவர் கெடுக்க இடர்*
*நினைக்கின் அவர் குலத்தைமுதல் அறக்களையும்*
*எனக்கு ஓர் துணை ஆகும் (திரு)* *60*

*திருத்தணியில் உதித்து அருளும் ஒருத்தன்மலை*
*விருத்தன் எனது உளத்தில் உறை*
*கருத்தன் மயில் நடத்துகுகன் வேலே (திரு)* *61*

*பருத்தமுலை சிறுத்தஇடை வெளுத்தநகை*
*கறுத்தகுழல் சிவத்தஇதழ் மறச்சிறுமி*
*விழிக்குநிகர் ஆகும் (திரு)* *62*

*தருக்கிநமன் முருக்கவரின் எருக்குமதி*
*தரித்தமுடி படைத்த விறல் படைத்த இறை*
*கழற்குநிகர் ஆகும் (திரு)* *63*

*சொலற்கு அரிய திருப்புகழை உரைத்தவரை*
*அடுத்தபகை அறுத்து எறிய*
*உறுக்கி எழும் அறத்தை நிலை காணும் (திரு)* *64*

*திருத்தணியில் உதித்து அருளும் ஒருத்தன்மலை*
*விருத்தன் எனது உளத்தில் உறை*
*கருத்தன் மயில் நடத்துகுகன் வேலே (திரு)* *65*

*திருத்தணியில் உதித்து அருளும் ஒருத்தன்மலை*
*விருத்தன் எனது உளத்தில் உறை*
*கருத்தன் மயில் நடத்துகுகன் வேலே (12)*

*தேரணி யிட்டுப் புரம் எரித் தான்மகன் செங்கையில்வேற்*
*கூரணி யிட்டணு வாகிக் கிரௌஞ்சங் குலைந்தரக்கர்*
*நேரணி யிட்டு வளைந்த கடகம் நெளிந்து சூர்ப்*
*பேரணி கெட்டது தேவேந்த்ர லோகம் பிழைத்ததுவே*

*வீரவேல் தாரைவேல் விண்ணோர் சிறை மீட்ட*
*தீரவேல் செவ்வேள் திருக்கைவேல் வாரி*
*குளித்தவேல் கொற்றவேல் சூர்மார்பும் குன்றும்*
*தொகைத்தவேல் உண்டே துணை*